DEPOSITION OF WITNESS

Judicial form No,53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI**

Calender : C.C.02-2020

:

Deposition of Witness for : PW 6

Defence

பெயர் கார்த்திக்தங்கம்

தொழில் : காவல் உதவி ஆய்வாளர்

தகப்பனார் பெயர் :

கணவர் பெயர் : ஜாதி :

கிராமம் : இனம் :

தாலூக்கா : வயது :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969, (Central Act 44 of 1969) on 06-04-2022

முதல் விசாரணை

நான் தற்போது சேயூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2019ம் வருடம் பெருமாநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 25.06.2019ம் தேதி அன்று பிற்பகல் 16.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது ஜானகி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 277/2019 இதச பிரிவுகள் 279, 304(A) ன்கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கைஅசலையும் வாதியின் புகாரையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண் 4 அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை பெருமாநல்லூர் காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைக்கப்பட்டது. அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

நான் சொன்ன நேரத்திலும் சொன்னமுறையிலும் புகார்பெறப்படவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நஷ்டஈடு பெறவேண்டும் என்பதற்காக பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரினை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் அவர் கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு அவரிடம் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையொப்பமிட்டார்.

(ஒப்பம்) எ்ஸ். விபிசி,
நீதித்துறை நடுவர்,
அவிநாசி.